அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம் நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 307 | 4 Pages | 2.6.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 307 | 4 பக்கங்கள் | 2.6.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்**

**விளக்கம்:**
**ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும்.**

## உடலில் சாத்தான் புகுந்துவிட்டதாக தனது 3 குழந்தைகளை கொடூரமாக தாக்கிய மதபோதகர் கைது

கன்னியாகுமரி ஜூன் 2

கன்னியாகுமரிமாவட்டம்தேவிகோடு இடைக்கோடுபகுதியைச்சேர்ந்தவர் கிங்ஸ்லி (45 வயது). மதபோதகராக உள்ளார். இவருடைய மனைவி சஜினி. இவர்களுக்கு 6, 3 வயதில் 2 மகன்களும், 8 மாதத்தில் ஒரு பெண் குழந்தையும் உள்ளனர்.

கிங்ஸ்லியும், அவரது மனைவியும் வெளியே சென்று விட்டு வீட்டுக்கு வந்தனர். அப்போது அவருடைய குழந்தைகள் பக்கத்து வீட்டிற்கு சென்று விளையாடி கொண்டிருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த கிங்ஸ்லி, 3 குழந்தைகளையும் கயிற்றால் சரமாரியாக அடித்துள்ளார். பக்கத்து வீட்டுக்காரர்கள் அளித்த தகவல்பேரில், கருங்கல் போலீசார் அங்கு வந்து 3 குழந்தைகளையும் மீட்டனர்.

விசாரணையில்கிங்ஸ்லிபோலீசாரிடம்கூறியதாவது,தினமும்ஊழியத்துக்கு செல்லும்போது குழந்தைகளை வீட்டில் வைத்து பூட்டிவிட்டு செல்வது வழக்கம். நேற்று முன்தினம் தான் வீட்டுக்கு வந்தபோது குழந்தைகளை காணவில்லை. அவர்கள் பக்கத்து வீட்டில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். எனவே அவர்களின் உடம்பில் சாத்தான் புகுந்து விட்டதாக கருதி அவர்கள் உடம்பில் இருந்து சாத்தானை விரட்ட கயிற்றினால் கட்டி வைத்து அடித்ததாக தெரிவித்தார். இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் 3 குழந்தைகளுக்கும் மருத்துவமனையில் சிகிச்சை அளித்து காப்பகத்தில் சேர்த்தனர்.

## சூடானில் பரவும் புதிய வகை காலரா தொற்று; 10 லட்சம் பேரை பாதிக்கும் என ஐ.நா. எச்சரிக்கை



கார்டும், ஜூன் 2

வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் ராணுவத்துக்கும், ஆர்.எஸ்.எப். எனப்படும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நீண்ட கால மோதல்போக்கு நிலவுகிறது. இதன் தொடர்ச்சியாக கடந்த 2023ம் ஆண்டு உள்நாட்டு போர் வெடித்தது. இதனால் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் அரசாங்கம் திணறுகிறது.

இந்தநிலையில் தற்போது புதிய வகை காலரா தொற்று பரவல் தலைவிரித்தாடுகிறது. தலைநகர் கார்டும் மற்றும் ஓம்டுர்மனில் இந்த பாதிப்பு அதிகம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் கோர்டோபான், சென்னார், காசிரா உள்ளிட்ட பல மாகாணங்களில் காலரா தொற்று வேகமாக பரவுகிறது.

அதன்படி கடந்த 6 மாதங்களில் சுமார் 7 ஆயிரத்து 700 பேர் காலரா தொற்றால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆவர். தண்ணீரால் பரவும் இந்த காலரா தொற்று அதிக வயிற்று வலியை ஏற்படுத்தி உயிரையே பறிக்கும் அபாயம் உடையது.

ஏற்கனவே நிலவும் உள்நாட்டு போருக்கு மத்தியில் காலரா தொற்றும் வேகமெடுத்ததால் அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 172 பேர் காலரா தொற்றுக்கு பலியாகினர்.

நிலைமை கைமீறிப் போனதால் அங்கு சுமார் 10 லட்சம் பேர் காலராவால் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக ஐ.நா.சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக சுகாதாரத்துறை மந்திரி ஹைதம் இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் விபத்துக்குள்ளான லாரியில் இருந்து தப்பிய 25 கோடி தேனீக்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை



வாஷிங்டன், ஜூன் 2

அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாண நெடுஞ்சாலையில் ஒரு லாரி சென்று கொண்டிருந்தது. தேனீ பண்ணைக்குச் சொந்தமான அந்த லாரியில் 25 கோடிக்கும் அதிகமான வளர்ப்பு தேனீக்கள் கொண்டு செல்லப்பட்டன. கனடா எல்லையில் உள்ள வாங்டாம் அருகே சென்றபோது அந்த லாரி டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் நிலைதடுமாறி சாலையோரம் இருந்த பள்ளத்தில் லாரி கவிழ்ந்தது.

இதில் லாரியின் பெட்டிக்குள் அடைத்து வைக்கப்பட்டு இருந்த தேனீக்கள் தப்பிபறந்துசென்றன.இதனையடுத்துஅந்தசாலைமூடப்பட்டுபோக்குவரத்து துண்டிக்கப்பட்டது. தகவலின்பேரில் அங்கு விரைந்த மீட்பு படையினர் தப்பியோடிய தேனீக்களை மீட்க முயன்று வருகின்றனர். இதன்காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் கவனமாக இருக்குமாறு உள்ளூர் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## லைபீரியா அதிபர் சென்ற விமானத்தில் என்ஜின் கோளாறு ஏற்பட்டதால் பரபரப்பு



மான்ரோவியா, ஜூன் 2

மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியாவின் அதிபர்ஜோசப்போகாய் அரசுமுறை பயணமாக நைஜீரியா சென்றிருந்தார். பயணத்தை முடித்துவிட்டு சிறிய ரக விமானம் மூலம் லைபீரியாவுக்கு புறப்பட்டார். அங்குள்ள ராபர்ட்ஸ் விமான நிலையம் அருகே சென்றபோது விமானத்தின் என்ஜின் செயலிழந்தது. எனவே விமானம் தரையிறங்குவதில் சிக்கல் நிலவியது.

எனினும் விமானியின் சாமர்த்தியத்தால் விமானம் பத்திரமாக தரையிறங்கியது. இதுகுறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் விமான நிலையம் சிறிதுநேரம் பரபரப்பாக காணப்பட்டது.

# மு.க.அழகிரியுடன் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்திப்பு



மதுரை, ஜூன் 1

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், ஆளுங்கட்சியான தி.மு.க. மதுரையில் நாளை கட்சியின் பொதுக் குழு கூட்டத்தை நடத்த இருக்கிறது. தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில், 6 ஆயிரத்து 500 பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என சுமார் 10 ஆயிரம் பேர் பங்கேற்க இருக்கின்றனர்.

தேர்தலை முன்னிறுத்தி நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதாக தெரிகிறது. தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மதுரை சென்றார். மதுரையில் ரோடு ஷோ நடத்திய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், அதன் பின்னர் முன்னாள் மேயர் முத்துவின் வெண்கல சிலையை திறந்து வைத்தார்.

இந்நிலையில், மதுரை பழங்காநத்தம் பகுதியில் உள்ள தனது சகோதரர் மு.க.அழகிரியை, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தற்போது சந்தித்தார். முதல்அமைச்சராக பதவியேற்ற பின், முதல்முறையாக மு.க.அழகிரி இல்லத்திற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகப்புகழ் பெற்றி தேசிய நெல் திருவிழா தொடங்கியது



திருவாரூர் மாவட்டம் பாரம்பரிய நெல்லை பரவலாக்கம் செய்யும் முயற்சியாக மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார் அவர்களால் தொடங்கி வைக்க பட்டு மறைந்த பாரம்பரிய நெல் மீட்பாளர் நெல் ஜெயராமன் அவர்களால் நடத்தப் பட்டு வந்த தேசிய நெல் திருவிழா இவ்வாண்டும் முன்னோடி இயற்கை விவசாயிகளின் தலைமையில் இனிதே மே.31 சனிக்கிழமை காலை 08.00 மணி அளவில் கருத்தரங்கம் ,நெல் கண்காட்சி ,கலை நிகழ்ச்சி என மிகச்சிறப்பாக நடைபெற்றது. முதலாவதாக உழவர்களின் பேரணி நடைபெற்றது. புதுச்சேரி மாநில இயற்கை விவசாய சங்க தலைவர் ஆர் வேணுகோபால் பேரணிக்கு தலைமை தாங்கினார். வேலுடையார் கல்விக் குழுமங்களில் தலைவர் கே எஸ் எஸ் தியாக பாரி கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். விதை நெல் கோட்டையை , காய்கறி மற்றும் பனைப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் பேரணியாக உழவர் சந்தை முதல் எ ஆர் வி மண்டபம் வரை எடுத்து வந்தனர். அப்போது நமது பாரம்பரிய இசையான தப்பாட்டம், கலை நிகழ்ச்சிகள், ஜல்லிக்கட்டு காளை பேரணி என பல்வேறு நிகழ்ச்சிகள் பேரணியில் நடந்தேறியது. 174 வகையான பாரம்பரிய நெல் கண்காட்சிக்கு காரைக்கால் திருமதி மரு. உமா மகேஸ்வரி தலைமை தாங்கினார். ஏ ஆர் வி குழும நிறுவனங்களின் தலைவர் எ.ஆர் வி விவேக் நெல் கண்காட்சியை திறந்து வைத்தார் .மிகப்பெரிய அளவில் அமைக்கப் பட்டு இருந்த கண்காட்சி அரங்கத்தை திறக்கும் நிகழ்ச்சிக்கு முன்னாள் நகர்மன்ற தலைவர் ஆர் எஸ் பாண்டியன் அவர்கள் தலைமை தாங்கினார். அரங்க திறப்பு விழாவிற்கு ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன், பாரதமாதா தொண்டு நிறுவன இயக்குனர் ஆர். வி.மணிமாறன்,தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு மைய பொதுச் செயலாளர் டாக்டர் ஆர் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கண்காட்சி அரங்கத்தை திருத்துறைப்பூண்டி வர்த்தக சங்கத் தலைவர் கே எஸ் செந்தில்குமார் அவர்கள் திறந்து வைத்தார்.நம்மாழ்வார் நெல் ஜெயராமன் மற்றும் முன்னோடி உழவர்கள் படத் திறப்பு நிகழ்வை நகர மன்ற தலைவர் திருமதி கவிதா பாண்டியன் தலைமை தாங்கி திறந்து வைத்தார். படத் திறப்பு விழாவிற்கு திருமதி கலை ராணி கண்ணன்,சித்ரா நெல் ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல் திருவிழாவிற்கு உயர் மட்ட குழு தலைவர் ஆர் அசோகன் தலைமை தாங்கினார், விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் பி ஆர் பாண்டியன் மற்றும் எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் தலைவர் கே எஸ் எஸ் செந்தூர் பாரி மற்றும் ஏனைய சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலை வகித்தனர்.தேசிய நெல் திருவிழாவிற்கு திருவாரூர் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாடி இயற்கை உழவருமான பூண்டி கே. கலைவாணன்,தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு துறை அமைச்சர் டி ஆர் பி ராஜா, மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச் சந்திரன்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.இந்த நிகழ்வில் பேசிய தொழில்துறை அமைச்சர் டி ஆர் பி ராஜா அவர்கள் பாரம்பரிய நெல் ஆராய்ச்சி மையம் திருவாரூரில் அமைப்பதற்கும்,பாரம்பரிய நெல் மீட்பாளர் ஜெயராமனுக்கு சிலை அமைப்பது குறித்தும் அரசிடம் அனுமதி பெற்று ஆவண செய்யப்படும் என்று உறுதி அளித்தார்..இந்த வருடம் 5 விவசாயிகளுக்கு உம்பளச்சேரி நாட்டின கன்றுகள் வழங்கப் பட்டது.இதிலிருந்து பெறப்படும் முதல் கன்றை ஒவ்வொரு ஆண்டும் நடைபெற உள்ள நெல் திருவிழாவில் மற்ற விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கொடுக்க வேண்டும் என்ற ஒப்புதலோடு பாரம்பரிய உம்பளச்சேரி நாட்டின கன்றுக் குட்டி வழங்கப்பட்டது. இயற்கை விவசாயத்தில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது, நெல் ஜெயராமன் விருது, சிறந்த தொழில்முனைவோர் விருது, இளம் இயற்கை உழவர் விருது ,சிறந்த இயற்கை உழத்தி விருது,சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையம் விருது,வேளாண் செம்மல் விருது,சுற்றுச்சூழல் பாதுகாவலர் விருது,பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது என பல விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மேலும் பாரம்பரிய இயற்கை விவசாயிகளுக்கு கை ஸ்பிரேயர் மற்றும் தார்பாய் வழங்கப்பட்டது. தஞ்சை தேவேந்திரன் தலைமையிலான பாரம்பரிய கலை அமைப்பை சேர்ந்தவர்கள் சிலம்பம், சுருள், வாள், கர்லா போன்ற நமது பாரம்பரிய கலைகளை நிகழ்த்தி சிறப்பித்தனர்.இந்த நெல் திருவிழாவில் காரியமங்கலம் பொன்னிவனம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் முகமது ரபிக்,சித்த மருத்துவரும், மாநிலத்திட்ட குழு உறுப்பினருமான கு. சிவராமன்,சிறப்பு திட்ட செயலாக்க துறை வேளாண் பொறியாளர் பிரிட்டோ ராஜ்,இயற்கை மருத்துவர் மற்று...

# ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நடத்திய தற்கொலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிப்பு

தற்கொலை என்பது எந்த நிலையிலும் தீர்வாக அமைய முடியாது என்பதை வலியுறுத்தும் நோக்குடன் ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நிறுவனம் நடாத்திய தற்கொலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மனநல மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய சிறப்பாக பங்கேற்ற அனைத்து மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப் பட்டு அவர்களது விழிப்புணர்வு பங்களிப்பு எளிதில் மறக்கமுடியாத வகையில் கௌரவிக்கப் பட்டது.

" வாழ்க்கையை நேசிக்கவும், உயிரைக் காக்கவும் " என்ற விழிப்புணர்வு கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்ற நிகழ்வில் உலகம் முழுவதிலிருந்தும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். கவிதைகள், மேடை நாடகங்கள், ஓவியக் கண்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு கலைவழி நிகழ்ச்சிகள் தற்கொலை எதிர்ப்பு செய்தியை தெளிவாகவும் ஆழமாகவும் மக்கள் மனங்களில் பதித்தன.

வாழ்க்கை என்பது ஒரு அரிய அன்பளிப்பு வாழ்க்கையின் நெருக்கடிகள் தற்காலிகமானவை என்பதையும் அவற்றை துணிச்சலுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்வதில்தான் உண்மையான வெற்றி நம்மை நோக்கி வருவதாகவும் இந்நிகழ்வு சிந்திக்கவைக்கும் செய்திகளை முன்வைத்தது.




பல்வேறு நாடுகள் மற்றும் கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே மேடையில் ஒன்றிணைந்து வாழ்க்கையின் மதிப்பையும் மனநலத்தின் அவசியத்தையும் வலியுறுத்திய நிகழ்வாக இது அமைந்தது. இதில் மாணவர்கள் தங்களது தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தி தன்னம்பிக்கைக்கும் மன உறுதியுக்கும் அருமையான எடுத்துக்காட்டாக இருந்தனர். இந்த விழா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜஸூரா ஜலீல் அவர்களின் ஊக்கமளிக்கும் வழிகாட்டுதலுடன் உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் சக்திவாய்ந்த ஒத்துழைப்பால் மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# காமராஜர் 50 படம் நடித்து முதல்அமைச்சராக வரவில்லை சீமான்

சென்னை ஜூன் 2

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சென்னையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், கல்வி விருது வழங்கும் விழாவில், விஜய்யை, இளைய காமராஜர் என்று ஆசிரியர் ஒருவர் கூறியது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த சீமான், "இதையெல்லாம் கேட்க நேரிடும் என்றுதான் ரொம்ப நாளைக்கு முன்னாடியே காமராஜர் செத்துப் போய் விட்டார். இளைய காமராஜர் என்று சொன்னவருக்கு காமராஜர் யார் என்றே தெரியாது. அந்த ஆசிரியர் என்ன படித்தாரோ, காமராஜரை படிக்கவில்லை. காமராஜர் 50 படம் நடித்து முதல்அமைச்சராக வரவில்லை. அரசியலுக்கு வரவில்லை" என்று கூறினார். மேலும் பேசிய அவர்கூறியதாவது: நான்யாருடனும்கூட்டு சேரவில்லை. சாப்பாட்டில் மட்டும்தான் கூட்டு பொரியல். சண்டை என்றால் தனித்துதான் போட்டியிடுவேன். கருணாநிதிக்கும் செம்மொழிக்கும் என்ன சம்பந்தம்? மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது செம்மொழி என அறிவித்ததால், செம்மொழி ஆனதா? தமிழ் செம்மொழி என அனைவரும் கூறுகின்றனர். நீங்கள் யார் தமிழ் மொழிக்கு அங்கீகாரம் பெற்றுத்தர? கருணாநிதி பிறந்த நாளை செம்மொழி நாள் என முதல்வர் அறிவித்தால், கட்சிக்காரர்கள் ஏற்பார்கள். மக்கள் ஏற்க மாட்டார்கள். மொழிக்காக உயிர்நீத்தவர் தாளமுத்து நடராஜன். தாளமுத்து நடராஜன் இறந்த நாளை செம்மொழி நாளாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடியில் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு உறுதிமொழி



தூத்துக்குடி ஜூன் 2

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், கலெக்டர் தலைமையில் இன்று (31.5.2025) பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் மாவட்ட சுகாதார நலச் சங்கம் ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் கீழ் செயல்படும் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் சார்பில் உலக புகையிலை எதிர்ப்பு தினத்தையொட்டி புகையிலை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தலைமையில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில்மாவட்ட சுகாதார அலுவலர்கள் யாழினி, வித்யா, துணை இயக்குநர்கள் சுந்தரலிங்கம் (காசநோய்), யமுனா (தொழுநோய்) மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பைக் சீட்டிற்கு அடியில் பதுங்கி இருந்த பாம்பு பார்த்ததும் பதறிய வாலிபர்

கிருஷ்ணகிரி, ஜூன் 2

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே சாலையில் அருண் என்பவர் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது பைக்கின் சீட்டுக்கு அடியில் பதுங்கி இருந்த பாம்பை கண்டு பதறிப் போனார். பின்னர் பைக்கை ஓரமாக நிறுத்தி விட்டு தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுத்தார்.



தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். பைக்கின் சீட்டை அப்புறப்படுத்திய தீயணைப்புத்துறையினர் சில நிமிடங்கள் போராடி பாம்பை பத்திரமாக பிடித்தனர்.

இந்த சம்பவத்தை அதே சாலையில் வந்த வாகன ஓட்டிகள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சிறிது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இளைஞர்கள் தாக்கியதில் அரசு பேருந்து நடத்துநர் உயிரிழப்பு தஞ்சை அருகே அதிர்ச்சி



தஞ்சாவூர் ஜூன் 2

தஞ்சை மாவட்டம் கபிஸ்தலம் பகுதியைச் சேர்ந்தவர் மணிகண்டன் (47). அரசு போக்குவரத்து கழக நடத்துநராக பணியாற்றி வந்தார். திருவையாறு அருகே அணைக்குடி கிராமத்தில் நடைபெறும் கோவில் திருவிழாவுக்கு மணிகண்டன் பைக்கில் சென்றுள்ளார். அப்போது, அணைக்குடியில் வீட்டின் முன்பு கோலம் போட்டுக் கொண்டிருந்த ஜெசிந்தா மேரி என்ற பெண் மீது மணிகண்டனின் பைக் மோதிவிபத்துஏற்பட்டது.

இதைப் பார்த்த அப்பகுதி இளைஞர்கள், மணிகண்டனை பிடித்து சரமாரியாக தாக்கினர். இதில் மணிகண்டன் படுகாயம் அடைந்தார். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மணிகண்டனை தாக்கியவர்கள் மீது கொலை வழக்கு பதிய வலியுறுத்தி அவரது உறவினர்கள் திருவையாறு கடை வீதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# நான் எங்காவது ஓடிவிட வேண்டும்.. இல்லை என்றால் விரக்தியில் பேசிய ஜி.கே. மணி



விழுப்புரம் ஜூன் 2

தைலாபுரத்தில் பா.ம.க கவுரவ தலைவர் ஜி.கே. மணி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பாமக நிறுவனர் ராமதாஸ் தனது நிலைப்பாட்டில் இருந்து சற்று இறங்கி வந்துள்ளார். என்னுடைய வேதனையை அவரிடம் சொல்லி இருக்கிறேன். சிறிது சமாதானம் அடைந்துள்ளார். அதே போல் அன்புமணி ராமதாசும் இறங்கி வர வேண்டும்


தற்போதுள்ள சூழல் நீடிக்க கூடாது என்பது தான் எங்களின் கருத்து. இரண்டு பேரும் நேரில் சந்தித்து உட்கார்ந்து பேசினால் பிரச்னைகள் எல்லாம் முடிவுக்கு வந்துவிடும். அதற்கான முயற்சிகளில் தான் நான் தீவிரமாக ஈடுபட்டு வருகிறேன்

ராமதாஸ் அவர்களிடமே நான் 'நான் 2 முடிவை எடுத்திருக்கேன். ஒன்று உங்களுக்கும், என் குடும்பத்துக்கும், கட்சிக்கும், நாட்டுக்கும் தெரியாதபடி எங்கேயாவது நான் ஓடி விட வேண்டும். இல்லையென்றால் உயிரோடே இருக்கக்கூடாது' என்று கூறினேன். அவர் என் வார்த்தைகளை உடனே வாபஸ் வாங்க சொன்னார்.

'நீங்க சரியாகுங்க மொதல்ல' என அவரிடமே சண்டை போட்டேன். கட்சியில் நடக்கும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் அவ்வளவு வேதனை தருகிறது.

இவ்வாறு ஜி.கே. மணி தெரிவித்தார்.

# தடபுடலாக தயாராகும் விருந்து.. தி.மு.க. பொதுக்குழுவில் சைவ, அசைவ உணவுகளின் பட்டியல்




மதுரை, ஜூன் 2

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், ஆளுங்கட்சியான தி.மு.க. மதுரையில் நாளை (ஞாயிற்றுக்கிழமை)கட்சியின்பொதுக்குழு கூட்டத்தை நடத்த இருக்கிறது. தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில், 6 ஆயிரத்து 500 பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என சுமார் 10 ஆயிரம் பேர் பங்கேற்க இருக்கின்றனர். தேர்தலை முன்னிறுத்தி நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதாக தெரிகிறது.

தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 11.45 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை புறப்பட்டார். பின்னர் மதியம் 1.05 மணிக்கு மதுரை வந்தடைந்தார். அவருக்கு அமைச்சர்கள் பெரியசாமி, நேரு, தங்கம் தென்னரசு, மூர்த்தி, சாத்துார் ராமச்சந்திரன், தியாகராஜன், எம்.பி., டி.ஆர்., பாலு, மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இன்று மாலை முதல்அமைச்சர் பங்கேற்கும் ரோடு ஷோ நிகழ்ச்சி நடக்கிறது. அவனியாபுரத்தில் இருந்து ஆரப்பாளையம் திருமலை நாயக்கர் சிலை வரை 22 கி.மீ. தூரத்திற்கு ரோடு ஷோ நடைபெற இருக்கிறது. முடிவில், முன்னாள் மேயர் முத்து சிலையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

இந்நிலையில் மதுரையில் நடக்கும் திமுக பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்கும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு தயாராகி வரும் சைவம் மற்றும் அசைவ உணவுகள் குறித்த முழு விவரமும் வெளியாகி இருக்கிறது.

சைவத்தை பொறுத்தவரை குல்கந்து பர்பி, பனங்கற்கண்டு மைசூர்பா, கதம்ப பொரியல், உருளைக்கிழங்கு காரகறி, சௌசௌ கூட்டு, சைவ சிக்கன் வறுவல், சைவ மீன் பிரை, வெண்டைக்காய் பிரை, காளிபிளவர் சில்லி, வெஜ் கட்லட், சாஸ், பருப்பு வடை, சப்பாத்தி, காளான் குழம்பு, வெஜிடபிள் பிரியாணி, ஆனியன் தயிர் பச்சடி, வெள்ளை சாதம், பருப்பு பொடி, நெய், சாம்பார், எண்ணெய் கத்திரிக்காய், காரக்குழம்பு, தக்காளி ரசம், சேமியா பால் பாயாசம், அப்பளம், தயிர், இஞ்சி புளி ஊறுகாய் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

அசைவத்தை பொறுத்தவரை பன் அல்வா, மட்டன் எண்ணெய் சுக்கா, மட்டன்காடி சாப்ஸ், மட்டன் உப்புக்கறி, மட்டன் கோலா உருண்டை, மட்டன் ஒயிட் குருமா, வஞ்சரமீன் வறுவல், நாட்டுக்கோழி மிளகு கறி, சிக்கன் 65, ஆம்லெட், மட்டன் பிரியாணி, எலும்பு குழம்பு, தயிர் வெங்காயம், சாதம், எலும்பு தால்சா, அயிரை மீன் குழம்பு, மட்டன் குழம்பு, ரசம், மோர், ஊறுகாய், ஜிகர்தண்டா, ஐஸ்க்ரீம், பீடா, வாழைப் பழம் ஆகியவை இடம் பெற்றுள்ளது.

மேலும் அனைவரும் ஒரே நேரத்தில் அமர்ந்து சாப்பிடும் வகையில் பிரம்மாண்ட சாப்பாடு அரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

# தமிழ்நாட்டில் இயல்பை விட 97 சதவீதம் அதிகம் பெய்த கோடை மழை

சென்னை, ஜூன் 2

சென்னையில்செய்தியாளர் சந்திப்பில் வானிலை மைய தென்மண்டல தலைவர் அமுதா கூறியதாவது:

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில், தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக திருத்தணியில் 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. கனமழை எச்சரிக்கை எதுவும் இல்லை.

நீலகிரி, கோவை, தென்காசி, நீலகிரி, குமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. கடந்த 3 மாதங்களில் தமிழ்நாட்டில் கோடை மழை 25 செ.மீ பெய்துள்ளது. இது இயல்பை விட 97 சதவீதம் அதிகம். சென்னையில் இயல்பை விட 12 சதவீதம் அதிகமாக கோடை மழை பெய்துள்ளது. சென்னையை பொறுத்தவரை கடந்த 3 மாதங்களில் ஒரு நாள் கூட 40 டிகிரி செல்சியஸ் வெப்பத்தை தொடவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வள்ளுவர் சனாதன தர்மத்தில் பெரிய துறவி கவர்னர் பேச்சுக்கு முத்தரசன் கண்டனம்



சென்னை, ஜூன் 2

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் .முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருச்சிஅருகில்கோவில் திருப்பணி அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி, உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வள்ளுவரை சனாதன தர்மத்தின் மிகப் பெரிய துறவி என்று கூறி இழிவுபடுத்தியுள்ளார். திருக்குறளின் மேன்மை அறிந்த மகாகவி பாரதி,வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என அவரை போற்றிக் கொண்டாடினார்.

நோபல் பரிசு பெற்ற மாமனிதர் ஆல்பர்சுவைட்சர் "வள்ளுவரின் அறநெறியில் காணும் பேரறிவு, உலக இலக்கியங்களில் அரிதாகவே இருக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருக்குறளை மொழிபெயர்ப்பு செய்த ஜி.யூ.போப் "மொழி, இனம், சமயம், நாடு என எல்லா எல்லைகளையும் அனைத்துலக மனிதனை பற்றி பாடியவர் வள்ளுவர்" என்கிறார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என கற்பனை கருத்தியலை சாடி, உழைப்பின் மேன்மை குறித்து திரும்ப, திருப்ப எடுத்துக் கூறி, மெய் ஞானம் போதித்த வள்ளுவரை ஆன்மிகம் என்ற பெயரில் மனிதர்களுக்கு மதவெறியூட்டி, பகையும், வெறுப்பும் வளர்த்து வரும், சனாதனக் கும்பலின் மூலவராக காட்ட முயற்சிக்கும் கவர்னர் ஆர்.என்.ரவி அறிவிலித்தனமாக பேசி வருவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணிமுத்தாறு அருவியில் குளிக்க 6வது நாளாக தடை



நெல்லை, ஜூன் 2

தென்மேற்குப் பருவ மழை கடந்த வாரம் தொடங்கியதை அடுத்து, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நெல்லை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் வனத்துறை கட்டுப் பாட்டில் உள்ள மணிமுத்தாறு அருவியில் தற்போது காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பு கருதி மணிமுத்தாறு அருவியில் குளிக்க 6வது நாளாக வனத்துறையினர் தடைவிதித்தனர். கோடை விடுமுறை நிறைவடையும் நிலையில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து மணிமுத்தாறு அருவிக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

# ஆபாசமாக வீடியோ கால்.. பல பெண்களுக்கு பாலியல் தொல்லை: வாலிபரின் மன்மத லீலைகள்

சென்னை, ஜூன் 2

இன்றைய இளம்பெண்கள் பலர் இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் ஆகிய சமூகவலைதளங்களில் மூழ்கி கிடக்கிறார்கள். முகம் தெரியாத நபர்களுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் யார் என்றே தெரியாத முகம் தெரியாத ஆண்களுடன் பழகி தவறான வழிகளுக்கும் சென்று விடுகிறார்கள்.

இதுபோன்ற பெண்களை குறிவைத்து வாலிபர்கள் பலர் போலியான இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் பக்கங்களை தொடங்கி வலை விரித்து வருவதும் தொடர்கதையாகி வருகிறது.அந்தவகையில் சென்னை நெற்குன்றம் பகுதியை சேர்ந்த பெண் ஒருவருடன் முகநூலில் பழகிய தூத்துக்குடி வாலிபர் ஒருவர் பல பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இது பற்றிய விவரம் வருமாறு:

சென்னை நெற்குன்றம் பகுதியை சேந்த பெண் ஒருவர் திருமணமாகி 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இவரது முகநூலில் சரவண விக்ரம் என்ற நபர் அறிமுகமாகி பழகி வந்துள்ளார். அப்போது அவர் நெற்குன்றம் பெண்ணுடன் மிகவும் நெருக்கமான பழகத்தை ஏற்படுத்தி அவருடன் ஆபாசமாக வீடியோ காலில் பேசுவதை வழக்கமாகி கொண்டுள்ளார்.

ஒரு கட்டத்தில் அந்த வாலிபர் வேறு யாருடனும் தொடர்பில் இருக்க கூடாது. என்னிடம் மட்டுமே பேச வேண்டும் நான் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும் எனக் கூறி தனது கட்டுபாட்டுக்குள் நெற்குன்றம் பெண்ணை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அந்த பெண்ணின் வாட்ஸ்ப்புக்கு ஆபாச வீடியோக்களை அனுப்பி அதுபோன்று செயல்பட வேண்டும் எனவும் அவர் மிரட்டி இருக்கிறார். தனக்கு 2 மகள்கள் இருப்பதால் பயந்துபோன பெண், தூத்துக்குடி வாலிபருடனான தொடர்பை துண்டித்துள்ளார்.

இருப்பினும் தூத்துக்குடி வாலிபர் பெண்ணின் சகோதரியை தொடர்பு கொண்டு என்னுடன் உங்கள் தங்கை தொடர்ந்து தொடர்பில் இல்லாவிட்டால் அவரது புகைப்படங்களையும் இரண்டு மகள்களின் போட்டோக்களையும் ஆபாசமாக மார்பிங் செய்து வெளியிட்டு விடுவேன் என்று கூறி தொடர்ச்சியாக மிரட்டல் விடுத்து வந்துள்ளார். ஆனால் எதற்கும் அந்த பெண் சம்மதிக்காததால் மகள்களை கொன்று விடுவேன் என்று மிரட்டி இருக்கிறார்.

இதனால் பயந்துபோன நெற்குன்றம் பெண் இது தொடர்பாக போலீசில் புகார் அளித்தார். இதன் அடிப்படையில் மேற்கு மண்டல சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அப்போது பெண்ணுக்கு ஆபாச தொல்லை கொடுத்த வாலிபரின் உண்மையான பெயர் கோபி என்பது தெரியவந்தது. தூத்துக்குடி நியூகாலனி முனியசாமிபுரம் பகுதியை சேர்ந்த அவர் சரவண விக்ரம் என்ற பெயரில் நிற்குன்றம் பெண்ணுடம் பழகி பாலியல் மிரட்டல் மற்றும் தொல்லையில் ஈடுபட்டு வந்தது தெரியவந்தது.

இதையடுத்து சென்னை தனிப்படை போலீசார் தூத்துக்குடி விரைந்து சென்று கோபியை கைது செய்து விசாரணை நடத்தினர். கைதான வாலிபர் கோபி 5 பேஸ்புக் மற்றும் 9 இன்ஸ்டாகிராம் பக்கங்கள் ஆகியவற்றை போலியாக பல பெயர்களில் உருவாக்கி வைத்திருப்பதும் தெரியவந்துள்ளது.கடந்த 3 ஆண்டுகளாகஅவர்இதுபோன்று பெண்கள் பலருக்கு தொடர்ச்சியாக பாலியல் தொல்லை கொடுத்து வந்த நிலையில்தான் சென்னை போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.பெண்களின் பேஸ்புக்மற்றும்இன்ஸ்டாகிராம் மெசஞ்சர் ஆகிய பக்கங்களுக்கு நண்பர் ஆவதற்கான பரிந்துரைசெய்வதை வழக்கமாக வைத்துள்ள கோபி, பெண்களுடன் பழகத்தொடங்கிய பிறகு அவர்களை ஆபாச வலையில் வீழ்த்தி உள்ளார்.

தனது 11 போலியான பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்கள் மூலமாக10க்கும் மேற்பட்ட பெண்களிடம் அவர் மன்மத ஆபாச லீலையில் ஈடுபட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

இது தொடர்பாக வாலிபர் கோபியை காவலில் எடுத்து விசாரணை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகே அவர் எத்தனை பெண்களிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்டார் என்பது பற்றிய முழு விவரங்கள் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்

# நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படுத்தியதாக தேசிய பாதுகாப்பு சட்டத்தில் ஒருவர் கைது




திருநெல்வேலி, ஜூன் 2

போர் தொடர்பாக பாகிஸ்தானுக்கு ஆதரவான மற்றும் இந்தியாவுக்கு எதிரான செய்திகளை அந்த நபர் தனது முகநூலில் பதிவிட்டிருந்தார்.

சமுதாயத்தில் மதநல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போர் தொடர்பாக பாகிஸ்தானுக்கு ஆதரவான மற்றும் இந்தியாவுக்கு எதிரான செய்திகளை, முகநூலில் பதிவிட்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதாக திருநெல்வேலியை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி சமுதாயத்தில் உள்ள மதநல்லிணக்கத்தை சீர்குலைத்து, அதன்மூலம் பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாககூறி, திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் (கிழக்கு) வினோத் சாந்தாராம், போலீஸ் உதவி கமிஷனர் (பாளையங்கோட்டைசரகம்)சுரேஷ், பாளையங்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) பொன்ராஜ் ஆகியோரின் பரிந்துரையின்பேரில், திருநெல்வேலி மாககர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி உத்தரவுப்படி திருநெல்வேலி, பாளையங்கோட்டை, விஸ்வபிராமின் தெருவை சேர்ந்த கனி மகன் ஷேக்முகமது (வயது 48), என்பவர் நேற்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப் பட்டார்.

# கல்லணைக்கால்வாய் பாலத்தில் இரும்பு தடுப்புகள் அமைப்பு





தஞ்சாவூர், ஜூன் 2

பூதலூர் ரெயில் நிலையம், பாரி காலனி, ஜெகன் மோகன் நகர் செல்லும் வழியில் உள்ள கல்லணைக்கால்வாய் பாலத்தின் மேல்பகுதியிலும், உள்பகுதியில் செடி, கொடிகள் வளர்ந்து இருந்தது. இதனால் தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதேபோல் கல்லணைக்கால்வாய் கரையில் கல்விராயன்பேட்டை அருகே பாலத்தின் தடுப்புச்சுவரில் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதனால் இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் தடுமாறி ஆற்றில் விழும் அபாயம் இருந்து வந்தது. இதை சீரமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

இதுகுறித்த செய்தி 'தினத்தந்தி' நாளிதழில் கடந்த 23ந்தேதி வெளியானது. இதன் எதிரொலியாக பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை அதிகாரிகள் கல்விராயன் பேட்டை கல்லணைக்கல்வாய் பாலத்தின் கரையை சீரமைத்து இரும்பு தடுப்பு அமைத்து அதில் ஒளிரும் சிவப்பு வில்லைகள் பொருத்தி உள்ளனர்.

இதேபோல் நெடுஞ்சாலைத்துறை சார்பில் பூதலூர் கல்லணைக்கால்வாய் பாலத்தின் உள்பகுதியில் மற்றும் மேல் பகுதியில் வளர்ந்திருந்த செடி கொடிகள் அகற்றப்பட்டு சீரமைத்தனர்.

இதை தொடா'ந்து உடன்நடவடிக்கைஎடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும் அந்த பகுதி பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# குடிக்கும் நீரிலும், பொழுதுபோக்கு படங்களிலும் பகையை காட்டலாமா? சீமான்



சென்னை, ஜூன் 2

'படையாண்ட மாவீரா' என்ற படத்தை வ.கவுதமன் இயக்கி, நடித்துள்ளார். பட விழாவில் சினிமா இயக்குனரும், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான சீமான் கலந்து கொண்டார். அப்போது சீமான் பேசியதாவது;

"தமிழில் இருந்து தான் கன்னடம் வந்தது என்று கமல்ஹாசன் பேசியது வெறும் கதை அல்ல, வரலாற்றை தான் எடுத்துச் சொன்னார். கமல்ஹாசன் கருத்தை ஏற்றுக்கொள்வதும், எதிர்ப்பதும் வேறு விஷயம். ஆனால் அவர் நடித்த 'தக்லைப்' படத்தை கர்நாடகாவில் வெளியிட விடமாட்டோம் என்பது நியாயமா? 'கே.ஜி.எப்.' போன்ற கன்னட படங்களை தமிழகத்தில் சுதந்திரமாக ஓட செய்தோமே... அதற்கு கிடைக்கும் பரிசா?

தமிழ் படங்களின் போஸ்டர்களை கர்நாடகாவில் கிழித்து எரித்துள்ளார்கள். அதுபோல தமிழர்கள் இங்கு செய்ய மாட்டார்கள். ஏனெனில் தமிழர்கள் பேரன்பும், பெருந்தன்மையும், உயர் மாண்பும் கொண்ட மக்கள். குடிக்கும் நீரிலும், பொழுதுபோக்கு படங்களிலும் பகையை காட்டலாமா?

தமிழகத்தின் வளம் தமிழர்களுக்கு என்று ஒரு நிலைப்பாட்டில் நாம் எல்லாம் நின்றால், தேசிய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை என்ன ஆகும்? இதெல்லாம் பேசினால் என்னை இனவெறியன் என்கிறார்கள். இருக்கட்டும். அதில் எனக்கு பெருமையும், பேரானந்தமும் உண்டு." இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

# நீட் தேர்வு குறித்த த.வெ.க. தலைவர் விஜய் கருத்து: புதிய தமிழகம் கட்சி ஆதரவு





சென்னை,ஜூன் 2

புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீட் தேர்வு குறித்து தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் அவர்கள் நேற்று கூறிய கருத்துக்குப் பிறகு. நீட் தேர்வு மீண்டும் விவாத பொருளாக்கப்பட்டு இருக்கிறது. விஜய் நீட் தேர்வு குறித்து சரியான கருத்தையே கூறி இருக்கிறார். தவறான கருத்தை எதையும் கூறவில்லை. ஆண்டொன்றுக்கு தமிழகத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பள்ளி மேல்நிலைப் படிப்பை முடித்துவிட்டு உயர்கல்வியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் என நான்கு துறைகள் முன்னிலை வகிக்கின்றன.

இன்றைய நவீன உலகில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பல வாய்ப்புகள் கொட்டி கிடைக்கின்றன. தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு பிளஸ் 2 தேர்வில் வெற்றி பெறும் 10 லட்சம் மாணவர்களால் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள 10,000 மருத்துவ இடங்களில் அனைவரும் வாய்ப்பை பெற இயலாது என்பது எதார்த்தம்.

எனவே மாணவச் செல்வங்கள் தங்களின் திறமைக்கு ஏற்ப ஒவ்வொரு துறையிலும் முன்னேறி செல்ல வழி காட்ட வேண்டியது ஒவ்வொரு சமூக பற்றாளர்களின் கடமையாக இருக்க வேண்டும். அதை விட்டு நீட்டை ஒழிப்பது என மாணவர்களுக்கு தவறான வழிகாட்டுதலை எவர் செய்தாலும் அவர்கள் தமிழ் மக்களுக்கு. தமிழகத்திற்கு துரோகம் செய்தவர்கள் எனக் கருத வேண்டும்.

அந்த வகையில் நீட் தேர்வு குறித்த த.வெ.க தலைவர் விஜய் அவர்களின் கருத்துக்கு எனது வாழ்த்துக்கள்! தொடர்ந்து தமிழக மக்களிடத்திலும், மாணவர்களிடத்திலும் உண்மையை உரக்கச் சொல்லி வர வேண்டும்! விஜய் அவர்களின் நீட் தேர்வு குறித்த குரலுக்கு புதிய தமிழகம் கட்சி என்றென்றும் துணை நிற்கும்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசும்போது, "நீட் தேர்வு மட்டும்தான் உலகமா. நீட்டை தாண்டி இந்த உலகம் ரொம்ப பெரியது. அதில், மாணவர்கள் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. அதனால் இப்போதே உங்கள் மனதை பலமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி இருந்தார்.

# காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு; ரெயில் முன்பு பாய்ந்து இளைஞர் தற்கொலை; கர்ப்பிணி காதலி எடுத்த சோக முடிவு

திருப்பத்தூர், ஜூன் 2

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரை அடுத்த பெரியாங்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர் ரஞ்சித்குமார். இவரது மகன் நித்தின் என்கிற கோகுல் (வயது 20), பெங்களூருவில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் பி.எஸ்சி., நர்சிங் 2ம் ஆண்டு படித்து வந்தார்.

இதே கல்லூரியில் கோகுல் படித்த அதே வகுப்பில் ஜோலார்பேட்டை அருகே உள்ள காவேரிப்பட்டு கிராமத்தை சேர்ந்த அனுமுத்து என்பவரது மகள் தரணி (20) நர்சிங் படித்து வந்தார். தரணியின் தங்கையும் இதே வகுப்பில் படித்தார். இருவரும் இரட்டை குழந்தைகள்.

இந்நிலையில் கோகுல், தரணி ஆகியோர் ஒரே வகுப்பில் படித்த நிலையில் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட பழக்கம் காதலாக மாறியது. இதையடுத்து காதலர்கள் பல இடங்களில் ஒன்றாக சுற்றினர். இதில் தரணி கர்ப்பிணியானார்.

கோகுலின் காதலை பெற்றோர் ஏற்காமல் எதிர்த்ததால் அவர்கள் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கோகுல் பெங்களூருவில் இருந்து ரெயிலில் ஆம்பூருக்கு திரும்பினார். நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டின் அருகே உள்ள தண்டவாளத்தில் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்தது தெரியவந்தது.

இதற்கிடையில் தகவல் அறிந்த கோகுலின் காதலி கர்ப்பிணியான தரணி அதிர்ச்சி அடைந்தார். அவர் நேற்று அதிகாலை வாணியம்பாடி ரெயில் நிலையம் யார்டு பகுதிக்கு வந்துள்ளார். அப்போது திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற மெயில் எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்தார். இதில் தூக்கி வீசப்பட்ட அவர் உடல் சிதைந்து பலியானார். தகவல் அறிந்து ரெயில்வே போலீசார் அங்கு சென்றபோது தரணியும், அவரது வயிற்றில் இருந்த 9 மாத ஆண் சிசுவும் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட கோகுலின் உடலை போலீசார் கைப்பற்றி ஆய்வு செய்தபோது, கோகுல் அவரது நெஞ்சில் காதலி தரணியின் பெயரை பச்சை குத்தியிருந்தது தெரிந்தது.

காதல் திருமணத்துக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் காதலனும், கர்ப்பிணி காதலியும் தனித்தனியாக ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டின் ரெயில் வளர்ச்சித் திட்டங்கள் முடக்கம் மத்திய அரசுக்கு சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்



சென்னை, ஜுன் 2

தமிழ்நாட்டின் ரெயில் வளர்ச்சி திட்டங்களை மத்திய அரசு முடக்கியதாக சு. வெங்கடேசன் எம்.பி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு ரயில் வளர்ச்சி திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிங்க் புத்தகம் கடந்த ஆண்டு நாடாளுமன்ற கூட்டத் தொடர் முடிந்த பின் தான் வெளியிட்டார்கள். இந்த ஆண்டு பிங்க் புத்தகத்தையே ஒழித்து விட்டு தொகுக்கப்பட்ட பட்ஜெட் விவரங்கள் என்று நீண்ட நாள் கழித்து வெளியிட்டார்கள். தமிழ்நாடு ரயில்வே திட்டங்களுக்கு வெறும் ஆயிரம் ரூபாய் தான் ஒதுக்கி உள்ளார்கள் என்பதை நான் விமர்சித்த பின்பும் எவ்வளவு ஒதுக்கீடு என்பதையே மறைத்து வந்தார்கள்? சிலதிட்டங்களை சர்வே திட்டத்திற்கு ஏன் மாற்றியுள்ளார்கள் என்று நான் கேள்வி எழுப்பியிருந்தேன்.

திண்டிவனம் செஞ்சி திருவண்ணாமலை, அத்திப்பட்டு புத்தூர் ஆகிய இரு புதிய பாதை திட்டங்களும் ஏற்கனவே முடக்கப்பட்டதாகவும் அதனை விடுவித்தால் தான் (டிப்ரீஸ் )பணம் செலவு செய்ய முடியும் என்றும் எனவே இரு திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தலா ரூபா 42.70 கோடியை சரண்டர் செய்கிறோம் என்றும் எழுதியுள்ளார். வேறு சில திட்டங்களை முடக்க பட்டியலில்இருந்துவிடுவிக்கவும் கோரி உள்ளார்.


"தமிழ்நாட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய ரயில்வே திட்டங்கள் மீண்டும் சர்வே செய்ய ஏன் மாற்றப்பட்டது?" என்று நான் எழுப்பிய கேள்வியின் உண்மை இப்பொழுது வெளியாகியுள்ளது.

ஈரோடு பழனி புதிய பாதை திட்டம். இந்தத் திட்டம் செயல்படுத்த முடியாதது என்றும் அதனை கைவிட வேண்டும் என்றும் தெற்கு ரயில்வே கடிதம் எழுதியுள்ளது. இதற்காக ஒதுக்கிய 52.135 கோடியை சரண்டர் செய்துள்ளார்கள். மதுரை அருப்புக்கோட்டை – தூத்துக்குடி புதிய பாதை திட்டத்தையே ஏற்கனவே முடக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான ஒதுக்கீடு ரூ 55.1667 கோடியை சரண்டர் செய்வதாகவும் கூறியுள்ளார்கள். ராமேஸ்வரம் தனுஷ்கோடி புதிய பாதை திட்டத்தை சுற்றுச்சூழல் காரணமாக கைவிட வேண்டும் என்று தமிழ்நாடுஅரசு கோரி உள்ளது. அதனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாததால் அதற்கான ஒதுக்கீடு ரூபாய் 5.1239 கோடியை சரண்டர் செய்கிறோம் என்றும் கூறியுள்ளார்கள். அதைப் போல மூன்று இரட்டை பாதை திட்டங்களான காட்பாடி விழுப்புரம்; சேலம் கரூர் திண்டுக்கல்; ஈரோடு கரூர் ஆகியவை இன்னமும் திட்ட தயாரிப்பு கட்டத்தில் தான் உள்ளன. எனவே இவற்றுக்கான ஒதுக்கீடு முறையே 200 கோடி 100 கோடி 100 கோடி ஆகியவற்றை செலவு செய்ய முடியாது என்றும் அதனை சரண்டர் செய்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த திட்டங்கள் மூன்றும் சர்வேக்கு மாற்றப்பட்டுள்ளது ஏன் என்று நான் கேட்டது இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. எனவே தமிழ்நாட்டின் முக்கிய புதிய பாதை மற்றும் இரட்டை பாதை திட்டங்களையும் மத்திய அரசு முடக்கியதை மறைக்கவே பிங்க் புத்தகம் வெளியிடுவதையே தவிர்த்தார்கள். தமிழ்நாடு ரயில் வளர்ச்சி திட்டங்களை மத்தியஅரசுமுடக்கியுள்ளதை மறைக்க ரயில்வே அமைச்சகம் தமிழ்நாடு அரசு நிலம் கையகப்படுத்தவில்லை என்று பொய்யான குற்றச்சாட்டு சொன்னதை நாம் பார்த்தோம். தமிழ்நாடு ரயில் வளர்ச்சி திட்டங்களை முடக்கியதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். முடக்கப்பட்ட திட்டங்களை மீண்டும் நடைமுறைப் படுத்த வேண்டும் என கோருகிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை: பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு வாரச்சந்தையில் ரூ.3 கோடிக்கு ஆடுகள் விற்பனை



திண்டுக்கல், ஜூன் 2

இஸ்லாமிய மாதமான துல்ஹஜ் மாதத்தின் 10ம் நாளில் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள், 'தியாகத் திருநாள்' என்று அழைக்கப்படும் பக்ரீத் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். அந்த வகையில், கடந்த மாதம் 28ந் தேதி வானில் பிறை தென்பட்டதைத் தொடர்ந்து, பக்ரீத் பண்டிகை வருகிற ஜூன் 7ந் தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படும் என்று தமிழக அரசின் தலைமை காஜி அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டை மாநகராட்சி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை களைகட்டியது. மணப்பாறை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட10 முதல் 20 கிலோ எடையுள்ள ஆடுகளை, ஏராளமான இஸ்லாமியர்கள் உள்ளிட்டோர் வாங்கிச் சென்றனர்.

10 கிலோ கிடாய் ஆடு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை என விற்பனை ஆனது. மொத்தமாக அங்கு சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல் திண்டுக்கல் மாவட்டம் கோபால்பட்டி வாரச்சந்தையில் ஒரே நாளில் 1 கோடி ரூபாய் வரை ஆடுகள் விற்பனையாகின. நத்தம், கோபால்பட்டி, சாணார்பட்டி, சுற்று வட்டார பகுதிகளில் இருந்து 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் சந்தையில் விற்பனைக்கு குவிந்த நிலையில் எடைக்கு ஏற்ப ஒரு ஆடு 10 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

அதே போன்று ஒரு கிடா ஆடு 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. மேலும் வழக்கத்தை விட அதிகமாக ஆடுகள் விற்பனையானதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# சென்னை விமான நிலையத்தில் லேசர் ஒளியை மிளிரவிட்டால் கடும் நடவடிக்கை: போலீசார் எச்சரிக்கை




சென்னை, ஜூன் 2

சென்னைவிமானநிலையத்துக்கு கடந்த வாரம் துபாயில் இருந்து 326 பயணிகளுடன் வந்த விமானம் தரையிறங்க முயன்றபோது பச்சை நிற லேசர் ஒளிக்கற்றை அடிக்கப்பட்டது. இதனால் விமானியும், பயணிகளும் பீதியும், பதற்றமும் அடைந்தனர். இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

விமான நிலையம் மற்றும் சுற்றி உள்ள இடங்கள் பாதுகாப்பு நிறைந்த கட்டுப்பாடுகள் அடங்கிய பகுதிகள் ஆகும். எனவே விமான நிலையம் மற்றும் சுற்றி உள்ள இடங்களில் இதுபோன்று லேசர் ஒளிக்கற்றைமிளிரவிடக்கூடாது என்று சென்னை போலீஸ் துறை சார்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.இந்ததடைஉத்தரவை மீறுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கடற்கரையில்... பக்தர்களுக்கு மீண்டும் அதிர்ச்சி; 5 பேர் காயம்

திருச்செந்தூர், ஜூன் 2

திருச்செந்தூரில் முருகன் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். அவர்கள், கடற்கரையில் புனித நீராடி விட்டு செல்வது வழக்கம். இந்நிலையில், திருச்செந்தூர் கடற்கரையில் திடீரென ஜெல்லி மீன்கள் கரை ஒதுங்கி வருகின்றன.

இந்த ஜெல்லி மீன்கள் விஷத்தன்மை கொண்டவை எனகூறப்படுகிறது. இந்நிலையில், இதனால் 3 குழந்தைகள் உள்பட 5 பேர் காயம் அடைந்துள்ளனர். கடலில் நீராடி கொண்டிருந்த பக்தர்களுக்கு உடலில் அரிப்பு ஏற்பட்டு உள்ளது. அவர்களின் கை, கால் மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து பாதுகாப்பு பணியில் இருந்த வீரர்கள், பணியாளர்கள் உடனடியாக செயல்பட்டு கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்களை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு, கோவிலில் உள்ள மருத்துவ முகாமில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கோவிலுக்கு வரும் பக்தர்களை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க கோரி, கோவில், பக்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் திருச்செந்தூர் கடற்கரையில் முள்ளெலிகள் கரை ஒதுங்கின. இந்த கடல் முள்ளெலிகளில் இருக்கும் சிறிய, கூர்மையான முட்கள் கடலில் புனித நீராடும் பக்தர்கள் மீது குத்தி அவர்களுக்கு காயம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, அவற்றை அகற்றும் பணியில் கோவில் நிர்வாகம் ஈடுபட்டது. இந்நிலையில், திருச்செந்தூர் கடற்கரையில் ஜெல்லி மீன்கள் கரை ஒதுங்கி, அதனால் பக்தர்கள் பலருக்கு காயம் ஏற்பட்டு உள்ளது.

# முதல்அமைச்சரின் காலை உணவுத் திட்ட மெனுவில் மாற்றம்



சென்னை, ஜூன் 2

தமிழ்நாட்டில், கடந்த ஏப்ரல் 25ம் தேதி முதல் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டது. வெயில் அதிகரிப்பால், பள்ளிகள் திறப்பு தள்ளிப்போகும் எனகூறப்பட்ட நிலையில், தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மிதமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த சூழலில் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் வெளியிட்ட அறிக்கையில், திட்டமிட்டப்படி நாளை மறுநாள் (ஜூன் 2 ஆம் தேதி) ஒன்று முதல் பிளஸ் 2 வகுப்புகளுக்கு பள்ளிகள் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது பள்ளி திறப்புக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளிக் கல்வித்துறை எடுத்து வருகிறது.

இந் நிலையில் முதல் அமைச்சரின் காலை உணவுத்திட்ட மெனுவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன் படி பள்ளிகள் திறப்பான ஜூன் 2ம் தேதி அன்று பொங்கல் + காய்கறி சாம்பார் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரிசி உப்புமா வழங்குவது நிறுத்தம் செய்யப்படுவதாகவும், வாரத்தில் இரு தினங்கள் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் பொங்கல் வழங்கப்பட வேண்டும் என்றும், திங்கட்கிழமைகளில் வழங்கப்பட்டு வந்த கோதுமை ரவை உப்புமா இனி வியாழக்கிழமை களில் வழங்கப்படும் என்றும் சமூக நலத்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

முன்னதாக தமிழ்நாட்டில் பள்ளி குழந்தைகளுக்காக காலை உணவுத் திட்டம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி தொடங்கப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. அதன்பிறகு ஊரகப் பகுதிகளில் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கும் காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் தமிழகத்தில் உள்ள 30,992 அரசு பள்ளிகளிலும், ஊரகப் பகுதிகளில் உள்ள 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், 17.53 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இதனிடையே, நடப்பு கல்வியாண்டு முதல் நகர்ப்புறங்களில் இயங்கி வரும் 1,545 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 1.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்த ப்படும் என்று தமிழக அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு: சிறுமியை கர்ப்பமாக்கிய தொழிலாளி கைது

ஈரோடு, ஜூன் 2

ஈரோடு மாவட்டம் நம்பியூர் அருகே உள்ள வேமாண்டம்பாளையத்தை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது 31). தொழிலாளி. இவர் நம்பியூர் பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துவதாக நம்பியூர் ஊராட்சி ஒன்றிய ஊர்நல அலுவலர் ராஜேஸ்வரிக்கு தகவல் கிடைத்தது. அவர் கோபி அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். அதில் விக்னேஷ் 17 வயது சிறுமியை திருமணம் செய்ததும், தற்போது சிறுமி 2 மாத கர்ப்பிணியாக இருப்பதும் தெரிந்தது. இதையடுத்து போலீசார்விக்னேஷைபோக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

2.6.2025

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல் நீர்



திருச்செந்தூர், ஜூன் 2

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், முந்திய நாட்கள், பிந்திய நாட்களில் காலையில் கடல்நீர் உள்வாங்குவதும், பின்னர் மாலையில் இயல்புநிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், வழக்கத்துக்கு மாறாக திடீரென இன்று காலை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் சுமார் 70 அடி தூரம் கடல் உள்வாங்கியது.

ஆனாலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்தவித அச்சமும் இன்றி பாறையில் நடந்து சென்று ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர். மேலும் பக்தர்கள் வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.

# ஓடும் பேருந்தில் டிரைவருக்கு திடீர் வலிப்பு கடலூரில் பரபரப்பு



கடலூர்: ஜூன் 2

விருதாச்சலத்தில் இருந்து கடலூர் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு அரசு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தை டிரைவர் முருகன் ஓட்டிச் சென்றார்.

இந்த நிலையில் நெய்வேலி அருகே சென்றுகொண்டிருந்தபோது திடீரென டிரைவர் முருகனுக்கு வலிப்பு ஏற்பட்டது. இதனால கட்டுப்பாட்டை இழந்த பேருந்து அங்குள்ள பாலத்தில் மோதியது. இதில் பேருந்தின் முன்பக்கம் இருந்த 3 பேர் தூக்கி வீசப்பட்டனர். தூக்கி வீசப்பட்டவர்கள் பாலத்தின் கீழ் விழுந்து பலத்த காயமடைந்தனர். இதனையடுத்து விபத்து தொடர்பாக தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இந்த விபத்தில் காயமடைந்த 15 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஓடும் பேருந்தில் டிரைவருக்கு வலிப்பு ஏற்பட்டு அரசு பஸ் விபத்துக்குள்ளான சம்பவம் கடலூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (2.6.2025)

**மேஷம்**
பணி: பணிகளில் தாமதம் ஏற்படக்கூடும்; மன அழுத்தம் அதிகரிக்கலாம்.
குடும்பம்: துணையுடன் அமைதியாக பேசுவது நல்லது.
பணம்: பணவரவு சீராக இருக்கும்; செலவுகளை கட்டுப் படுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலத்தில் சிறிய பிரச்சனைகள் ஏற்படலாம்; கவனம் தேவை.

**ரிஷபம்**
பணி: பணியில் முன்னேற்றம் காணப்படும்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் மகிழ்ச்சியான நேரம் கழிப்பீர்கள்.
பணம்: பணவரவு அதிகரிக்கும்; சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**மிதுனம்**
பணி: சக பணியாளர்களால் மன அழுத்தம் ஏற்படலாம்.
குடும்பம்: துணையுடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.
பணம்: பண இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலத்தில் சிறிய பிரச்சனைகள் ஏற்படலாம்; தாயின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**கடகம்**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; திட்டமிட்டு செயல்படுங்கள்.
குடும்பம்: துணையுடன் சண்டைகள் ஏற்படலாம்; அமைதியாக இருங்கள்.
பணம்: பண வரவு அதிகரிக்கும்; செலவுகளும் அதிகரிக்கும்.
ஆரோக்கியம்: கால் வலி போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்; நீண்ட பயணங்களை தவிர்க்கவும்.

**சிம்மம்**
பணி: பணிகளில் முன்னேற்றம் காணப்படும்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் அன்பாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: பண இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
ஆரோக்கியம்: உணவில் கவனம் செலுத்துங்கள்; ஒவ்வாமை பிரச்சனைகள் ஏற்படலாம்.

**கன்னி**
பணி: பணிகளில் சிறந்த முன்னேற்றம் காணப்படும்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் அன்பாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: பண வரவு அதிகரிக்கும்; சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்**
பணி: திறமையை வெளிப்படுத்துவதற்கு நல்ல நாள்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் அன்பான உறவு நிலைபெறும்.
பணம்: பண வரவு அதிகரிக்கும்; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
ஆரோக்கியம்: சிறிய பிரச்சனைகள் ஏற்படலாம்; மன அமைதியை பேணுங்கள்.

**விருச்சிகம்**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; திட்டமிட்டு செயல்படுங்கள்.
குடும்பம்: துணையுடன் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: பண வரவு குறைவாக இருக்கும்; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
ஆரோக்கியம்: தோல் பிரச்சனைகள் ஏற்படலாம்; உணவில் கவனம் செலுத்துங்கள்.

**தனுசு**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; திட்டமிட்டு செயல்படுங்கள்.
குடும்பம்: துணையுடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.
பணம்: பண வரவு குறைவாக இருக்கும்; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
ஆரோக்கியம்: சளி போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்; குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.

**மகரம்**
பணி: திறமையை வெளிப்படுத்துவதற்கு நல்ல நாள்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: பண வரவு அதிகரிக்கும்; சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**கும்பம்**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் மகிழ்ச்சியாக நேரம் செலவிடுங்கள்.
பணம்: பண வரவு அதிகரிக்கும்; சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.
ஆரோக்கியம்: உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**மீனம்**
பணி: பணிகள் அதிகமாக இருக்கும்; திட்டமிட்டு செயல்படுங்கள்.
குடும்பம்: துணையுடன் நல்லுறவை பேணுங்கள்.
பணம்: பண வரவு திருப்திகரமாக இருக்கும்; குடும்ப தேவைகளுக்கு செலவு செய்யலாம்.
ஆரோக்கியம்: உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

# அரசு பணியிடங்களின் காலியிட விவரத்தில் வெளிப்படைத்தன்மை வேண்டும்: டிடிவி தினகரன்



சென்னை, ஜூன் 2

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தமிழக அரசுப் பணிகளில் இருந்து இன்று ஒரே நாளில் 8,144 ஊழியர்கள் ஓய்வு – காலிப்பணியிடங்களை நிரப்பாமல் தற்காலிக ஊழியர்களையும், ஆலோசகர்களையும் வைத்தே அரசு நிர்வாகத்தை நடத்த திட்டமிட்டிருக்கிறதா திமுக அரசு ?

தமிழக அரசின் குரூப் ஏ, குரூப் பி, குரூப் டி உள்ளிட்ட பணியிடங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 144 அரசுப் பணியாளர்கள் இன்று ஒரே நாளில் ஓய்வுபெறுவதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் காலியாக உள்ள 3.5 லட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும், ஆண்டுதோறும் பத்து லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என வாக்குறுதியளித்த திமுக, ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகள் கடந்தும், அந்த வாக்குறுதியில் 25 சதவிகிதத்தை கூட நிறைவேற்றவில்லை என்பதற்கு அரசுத்துறைகளில் நிலவும் பணியாளர் பற்றாக்குறையே சாட்சியாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பணி ஓய்வு பெறுவார்கள் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும், அதற்கு ஏற்ப அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போதுமான எண்ணிக்கையில் அரசு ஊழியர்களை நியமிக்கத் தவறிய அரசு நிர்வாகத்தின் அலட்சியப் போக்கிற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார் ?

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் அரசுத்துறைகளில் நிலவும் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, திமுக ஆட்சிக்கு வந்த பின் அரசுத்துறைகளில் இது வரை நிரப்பப்பட்ட காலிப்பணியிடங்களின் விவரங்களை வெளிப்படைத்தன்மையோடு வெளியிட வேண்டும் எனவும் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழி

தூத்துக்குடி ஜூன் 2

உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இன்று (31.6.2025) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையினர் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழி எடுத்தனர். அப்போது அவர்கள் அனைவரும்,

"நான் ஒருபோதும் புகை பிடிக்கவோ அல்லது புகையிலைப்பொருட்களையாதொருவடிவிலும்உட்கொள்ளவோ மாட்டேன் என்றும், அவ்வாறு புகை பிடிப்பதற்கு அல்லது புகையிலைப் பொருட்களை யாதொரு வடிவிலும் உட்கொள்வதற்கு என்னுடைய உறவினர் அல்லது நண்பர்களை ஊக்குவிக்க மாட்டேன் என்றும், நான் என்னுடன் பணியாற்றும் சக ஊழியர்களை புகையிலை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க ஊக்குவிப்பேன் என்றும், மேலும் புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவதினால் மாசுபடுவதிலிருந்து எனது சுற்றுச்சூழலை பாதுகாக்க பங்களிப்பேன் என்றும் உறுதி அளிக்கிறேன்" என்று கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் பத்மநாபன், உறைவிட மருத்துவர் சைலஸ் ஜெயமணி, நெஞ்சக நோய் பிரிவு தலைவர் சங்கமித்ரா, மனநல மருத்துவர் ஸ்ரீராம் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையினர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின்போது மருத்துவர்கள் புகையிலை உபயோகப்படுத்துவதால் ஏற்படும் கேடுகள் குறித்து விளக்கி பேசினர். மேலும் புதிய முறையில் இளைய தலைமுறையினரை புகையிலை பொருட்களால் கவர்ந்து சீரழிக்கும் விஷயங்கள் குறித்து விளக்கி பேசினார்கள்.

# மாநிலங்களின் மொழி, கலாச்சார பன்முகத்தன்மையை பாதுகாக்க வேண்டும் செல்வப்பெருந்தகை



சென்னை ஜூன் 2

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"கடந்த காலங்களில் சென்னை மற்றும் திருச்சி பண்பலை அகில இந்திய வானொலியில் (ஆகாஷ வாணி) இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 5.45 மணி வரைக்கும் இனிமையான தமிழ் பட பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வந்தது.

டாக்சி, ஆட்டோ ஓட்டுநர்கள், இரவில் பணியில் இருப்பவர்கள் மற்றும் நீண்ட தூரம் காரில் பயணிப்பவர்கள் வானொலியில் ஒலிப்பரப்படும் தமிழ் பட பாடல்களை கேட்டு களைப்பில்லாமல் வேலை செய்து வந்தார்கள்.

தற்போது தமிழ் பாடல்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, இந்தி பட பாடல்கள் ஒலிப்பரப்பு செய்யப்பட்டு வருகிறது. இது இந்தி திணிப்பிற்கு மற்றொரு உதாரணமாகும். ஆகாஷவாணியில் மாநிலங்களின் மொழி, கலாச்சார பன்முகத்தன்மையை பாதுகாக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க.விற்கு தமிழ்நாட்டு மக்களின் மொழி, கலாச்சார உணர்வுகள் என்றுமே முக்கியமானதாக இருந்ததில்லை என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

ஒன்றிய அரசின் கீழ் உள்ள நிறுவனங்களில் வேண்டுமென்றே இந்தியை திணிப்பது கடும் கண்டனத்துக்குரியது. சென்னை, திருச்சி பண்பலைகளில் மீண்டும் தமிழ் படபாடல்களை ஒலிபரப்பு செய்யப்படவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிரான்ஸில் நடைபெறவுள்ள ஜிடி 3 ரேஸ்க்கு தயாராகும் அஜித்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக திகழும் அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. இந்த ஆண்டு தொடக்கத்தில் துபாயில் நடந்த கார் பந்தய போட்டியில் அவரது அணி 3ம் இடம் பிடித்து அசத்தியது. அதேவேளை கலைத்துறையில் ஆற்றி வரும் சிறந்த பங்களிப்புக்காக அஜித்குமாருக்கு, மத்திய அரசு பத்மபூஷண் விருது அறிவித்தது. இத்தாலியில் நடைபெற்ற 12வது மிச்செலின் முகெல்லோ கார் பந்தயத்தில் அஜித்குமார் பங்கேற்ற ரேஸிங் அணி 3ம் இடம் பிடித்து அசத்தியது. தற்பொழுதுஜிடி4யூரோபியன்சீரிஸ்கார்பந்தயத்தில்அஜித்கலந்துக்கொண்டுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற பயிற்சியின்போது நடிகர் அஜித் ஓட்டிய கார் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்கு உள்ளானது. எனினும் அஜித்திற்கு எந்த காயமும் ஏற்படவில்லை. காரின் முன் பகுதி மட்டுமே சேதமடைந்ததாக அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலானது. இதற்கு முன்பு நடைபெற்ற கார் பந்தயங்களிலும் அஜித்தின் கார் விபத்தில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே பல்வேறு சர்வதேச ரேஸிங் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தனது திறமையை நிரூபித்துள்ள அஜித், தற்போது ஜிடி3 ரேஸிங் போட்டிக்கு தயாராகவுள்ளார் என்ற செய்தி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ரேஸில் பங்கேற்கும் முன்னோட்ட பயிற்சிகள் தற்போது பிரான்ஸில் உள்ள பால் ரிச்சர்ட் ரேஸ் டிராக்கில் நடந்து வருகின்றது.அஜித்அங்குரேஸிங்உடையில்,தனதுவாகனத்துடன்தயாராகியுள்ளபுகைப்படங்கள்சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அஜித் ரேஸ் டீம் தீவிரமாக தயாராகி வருகிறது.

# "தக் லைப்" படத்தின் "விண்வெளி நாயகா" பாடல் வெளியீடு




36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான்இசையமைத்திருக்கும்இப்படத்தைராஜ்கமல்பிலிம்ஸ்இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் வருகிற ஜூன் 5ம் தேதி திரைக்கு வருகிறது.

படத்தின் ரிலீஸ் தேதி நெறுங்கி வருவதால் படத்திற்கான புரோமோஷன் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை சாய் ராம் என்ஜினீயரிங் கல்லூரியில் சமீபத்தில் நடைபெற்றது.

'தக் லைப்' படத்தின் முதல் பாடலான 'ஜிங்குச்சா' வெளியாகி மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்று வருகிறது. இத்திரைப்படத்தின் 'ஜிங்குச்சா' பாடல் யூடியூபில் 4 கோடி பார்வைகளை கடந்துள்ளது. இப்பாடலை கமல்ஹாசன் வரிகளில் ஆதித்யா, வைஷாலி சமந்த், சக்தி ஸ்ரீ கோபாலன் இணைந்து பாடியுள்ளனர். இந்த படத்தின் 2வது பாடலான 'சுகர் பேபி' வெளியாகி மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்று வருகிறது.

இந்தநிலையில்,'தக்லைப்'படத்தில்இடம்பெற்றுள்ள'விண்வெளிநாயகா'பாடலைபடக்குழுவெளியிட்டுள்ளது.ஏ.ஆர். ரகுமான் இசையில் சுருதிஹாசன், ஏ.ஆர்.அமீன் பாடியுள்ள இப்பாடல் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. ஜிங்குச்சா, சுகர் பேபி, முத்த மழை, விண்வெளி நாயகா , அஞ்சு வண்ண பூவே, ஓ மாறா, எங்கேயோ, லெட்ஸ் பிளே ஆகிய பாடல்கள் படத்தில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது

# "மகாராஜா" பட இயக்குநரை அழைத்து பாராட்டிய ஆஸ்கர் விருது வென்ற எழுத்தாளர்

'குரங்கு பொம்மை' படத்தை இயக்கிய நிதிலன் சுவாமிநாதன், நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்கிய திரைப்படம் 'மகாராஜா'.இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரித்துள்ளனர்.

இத்திரைப்படம் கடந்த ஆண்டு ஜூன் 14ம் தேதி வெளியானது. இந்த படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பெண் பிள்ளைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் ரீதியான வன்கொடுமையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் மக்களின் வரவேற்பை பெற்றது. இப்படத்தின் வசூல் ரூ201 கோடியை தாண்டியது. திரை வெற்றியைத் தொடர்ந்து ஓ.டி.டி.யிலும் மக்களின் வரவேற்பை பெற்றது. நெட்பிளிக்ஸ் தளத்தில் கடந்த ஆண்டு வெளியான இந்தியப் படங்களிலேயே அதிகம் பார்க்கப்பட்ட படங்களில் 'மகாராஜா' 2 கோடிக்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றது.

மகாராஜா திரைப்படத்தை சீன மொழியில் டப்பிங் செய்து சீனாவில் கடந்த ஆண்டு நவம்பர் 29ந் தேதி வெளியிட்டனர். இப்படம்சுமார்40,000திரைகளில்வெளியிடபட்டது.இப்படம்சீனரசிகர்களின்வரவேற்பைபெற்றுகொண்டாடப்பட்டது. இந்த படத்தின் இயக்குனர் நித்திலன் சுவாமிநாதனுக்கு பெரிய அளவில் பாராட்டுகளும் கிடைத்தது.

இந்நிலையில், தற்போது அமெரிக்கா சென்றுள்ள இயக்குநர் நித்திலன், நியூயார்க்கில் 'பேர்ட்மேன்' பட திரைக்கதை எழுத்தாளர் அலெக்சாண்டர் டினோலாரிஸை சந்தித்திருக்கிறார். இந்த சந்திப்பு தொடர்பாக தனது எக்ஸ் தளப்பக்கத்தில் வெளியிட்டிருக்கும் அவர், "என்றைக்கும் மனதில் வைத்து போற்றும் வகையிலான ஒரு சம்பவம் நியூயார்க்கில் நடந்தது. 'பேர்ட்மேன்' எனக்கு மிகவும் பிடித்த படங்களில் ஒன்று. ஆஸ்கர் விருது பெற்ற திரைக்கதை எழுத்தாளருடன் உணவருந்தி நேரத்தை செலவிடுவது என்பது சிறந்த அனுபவம். என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்து இவ்வளவு அன்பை காட்டியதற்கு நன்றி அலெக்சாண்டர் டினோலாரிஸ்" என்று நெகிழ்ச்சியாகப் பதிவிட்டிருக்கிறார்.

'மகாராஜா' படத்தைப் பார்த்த ஆஸ்கர் விருது வென்ற 'பேர்ட்மேன்' படத்தின் இயக்குநர் படக்குழுவினரை வெகுவாகப் பாராட்டியதாகவும், அவரது அடுத்த படத்தில் நடிக்க அனுராக் காஷ்யப்புக்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் நிதிலன் சுவாமிநாதன் கடந்த ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார்.

# ஐ.பி.எல். தகுதி சுற்று 2: பஞ்சாப் அணிக்கு 204 ரன்கள் இலக்கு நிர்ணயித்த மும்பை



18வது ஐ.பி.எல். தொடர் இறுதி கட்டத்தை எட்டி விட்டது. முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி, பெங்களூரு அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்துவிட்டது. இதையடுத்து இறுதிப்போட்டிக்குமுன்னேறும்2வதுஅணிஎது?என்பதைநிர்ணயிக்கும் தகுதி சுற்று 2 ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணியின் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதற்கிடையில் நரேந்திர மோடி ஸ்டேடியத்தில்மழைபெய்ததன்காரணமாகஆட்டத்தைதொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் 7.30 மணியளவில் தொடங்க வேண்டிய ஆட்டம் சுமார் 2.15 மணி நேரம் தாமதமாக தொடங்கியது. ஓவர்கள் எதுவும் குறைக்கப்படவில்லை.

இதையடுத்து மும்பை அணி முதலாவதாக பேட்டிங் செய்தது. அணியின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா, ஜானி பேர்ஸ்டோ களமிறங்கினர். இதில் ரோகித் சர்மா 8 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறிய நிலையில், அடுத்து வந்த திலக் வர்மாவுடன் பேர்ஸ்டோ ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சற்று நிதானமாக ஆடி ரன் சேகரிப்பில் ஈடுபட்டது.

இதில் பேர்ஸ்டோ 38 ரன்களில் ஜோஸ் இங்கிலிஸ் பந்துவீச்சில் கேட்ச் ஆனார். மறுபுறம் அதிரடியாக விளையாடிய திலக் வர்மா, 29 பந்துகளில் 44 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 15 ரன்களில் அவுட் ஆகி வெளியேறினார்.

அதிரடியாக விளையாடி அரைசதம் நோக்கி முன்னேறிய சூர்யகுமார் யாதவ், 44 ரன்கள் எடுத்த நிலையில் நேஹல் வதேரா பந்துவிச்சில் விக்கெட்டை இழந்தார். 7 பவுண்டரிகளை விளாசிய நமன் திர், 18 பந்துகளில் 37 ரன்கள் குவித்து அவுட் ஆனார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 203 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 204 ரன்கள் என்ற இலக்கை நோக்கி பஞ்சாப் அணி விளையாடி வருகிறது.

# ஸ்ரேயாஸ் அதிரடி... மும்பையை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்த பஞ்சாப்

18வது ஐ.பி.எல். தொடர் இறுதி கட்டத்தை எட்டி விட்டது. முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி, பெங்களூரு அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்துவிட்டது. இதையடுத்து இறுதிப்போட்டிக்கு முன்னேறும் 2வது அணி எது? என்பதை நிர்ணயிக்கும் தகுதி சுற்று 2 ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணியின் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதற்கிடையில் நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் மழை பெய்ததன் காரணமாக ஆட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் 7.30 மணியளவில் தொடங்க வேண்டிய ஆட்டம் சுமார் 2.15 மணி நேரம் தாமதமாக தொடங்கியது. ஓவர்கள் எதுவும் குறைக்கப்படவில்லை.

இதையடுத்து மும்பை அணி முதலாவதாக பேட்டிங் செய்தது. அணியின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா, ஜானி பேர்ஸ்டோ களமிறங்கினர். இதில் ரோகித் சர்மா 8 ரன்களில் கேட்ச் ஆகி வெளியேறிய நிலையில், அடுத்து வந்த திலக் வர்மாவுடன் பேர்ஸ்டோ ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சற்று நிதானமாக ஆடி ரன் சேகரிப்பில் ஈடுபட்டது.

இதில் பேர்ஸ்டோ 38 ரன்களில் ஜோஸ் இங்கிலிஸ் பந்துவீச்சில் கேட்ச் ஆனார். மறுபுறம் அதிரடியாக விளையாடிய திலக் வர்மா, 29 பந்துகளில் 44 ரன்கள் எடுத்த நிலையில், கேட்ச் ஆகி ஆட்டமிழந்தார். கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 15 ரன்களில் அவுட் ஆகி வெளியேறினார். அதிரடியாக விளையாடி அரைசதம் நோக்கி முன்னேறிய சூர்யகுமார் யாதவ், 44 ரன்கள் எடுத்த நிலையில் நேஹல் வதேரா பந்துவிச்சில் விக்கெட்டை இழந்தார். 7 பவுண்டரிகளை விளாசிய நமன் திர், 18 பந்துகளில் 37 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 203 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 204 ரன்கள் என்ற இலக்கை நோக்கி பஞ்சாப் அணி விளையாடியது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய பிரப்சிம்ரன் சிங் 6 ரன்களில் அவுட் ஆன நிலையில், அடுத்த விக்கெட்டுக்கு ஜோஷ் இங்கிலிஸ் களமிறங்கினார். மற்றொரு தொடக்க வீரர் பிரியான்ஷ் ஆர்யா 20 ரன்களில் கேட்ச் ஆகி ஆட்டமிழந்தார். இதையடுத்து கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயருடன் ஜோஷ் இங்கிலிஸ் ஜோடி சேர்ந்தார். 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 38 ரன்கள் சேர்ந்த ஜோஷ் இங்கிலிஸ், ஹர்திக் பாண்ட்யா வீசிய பந்தை தூக்கி அடிக்க முயன்று விக்கெட் கீப்பர் பேர்ஸ்டோவிடம் கேட்ச் ஆனார். இதையடுத்து நேஹல் வதேராஸ்ரேயாஸ் ஐயர் ஜோடி ஒன்று சேர்ந்து மும்பை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தது. அரைசதம் நோக்கி முன்னேறிய நேஹல் வதேரா(4 பவுண்டரி, 2 சிக்ஸர்) 48 ரன்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் ஸ்ரேயாஸ் ஐயர், 27 பந்துகளில் அரைசதம் கடந்தார். சஷாங்க் சிங், 2 ரன்களில் ரன் அவுட் ஆனார்.

இறுதிவரை நிலைத்து நின்று அதிரடி காட்டிய ஸ்ரேயாஸ் ஐயர் 41 பந்துகளில் (5 பவுண்டரி, 8 சிக்ஸர்) 87 ரன்கள் விளாசினார். இறுதியில் பஞ்சாப் அணி 19 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 207 ரன்கள் குவித்தது. மும்பை அணியில் அஸ்வணி குமார் 2 விக்கெட்டுகளும், ஹர்திக் பாண்ட்யா மற்றும் டிரெண்ட் போல்ட் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் மும்பை அணியை வீழ்த்தி பஞ்சாப் அணி இறுதிப்போட்டிக்குள்நுழைந்துள்ளது.நாளைநடைபெறும் ஐ.பி.எல். 2025 இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியுடன், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி மோத உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.